Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 மாசி30 புதன்கிழமை (13-03-1996) **UTHAYAN** A Lively National Tamil Daily கதிர் 108

# கிழக்கிலிருந்து துருப்புக்கள் மீண்டும் வடக்கிற்கு நகர்வு!

## படையினர் ஷெல், பீரங்கி தாக்குதல்கள்

சாவகச்சேரி, மார்ச் 13

நேற்று பலாலியில் இருந்து தொண்டமானாறு, அச்சுவேலி கரு டாவில் ஆகிய பகுதிகளை நோக்கி படையினர் கடும் ஷெல் தக்குதல்களை மேற் கொண்டனர்.

அதேசமயம் படையினரின் ஆக்கிரமிப்புப் பிரதேசமான

(4 ஆம் பக்கம் பார்க்க)

## படை அதிகாரி தகவல்

கொழும்பு, மார்ச் 13

**இராணுவ நடவடிக்கைக்காக வடக்கிலிருந்து மட்டக்களப்புப் பிரதேசத்திற்கு அழைக்கப்பட்டிருந்த விசேட படை அணிகளையும் கொமாண்டோ பிரிவுகளையும் சேர்ந்த படையினரை மீண்டும் வடபகுதிக்கு நகர்த்தும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாம்.**

**மூத்த பாதுகாப்பு அதிகாரி ஒருவர் இத் தகவலை வெளியிட்டதாக ''திவயின'' சிங்கள நாளிதழ் செய்தி வெளியிட்டிருக்கின்றது.**

வடக்கில் மேற்கொள்ளப்பட்ட ''சூரியப் பிரகாசம்'' இராணுவ நடவடிக்கையை அடுத்து கிழக்கு மாகாணத்துக்கு அனுப்பப்பட்டிருந்த படைப்பிரிவுகளே தற்போது மீண்டும் வடபகுதிக்கு அனுப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நிறுத்தப்படாது சென்ற பஸ் மீது படையினர் சூடு

கொழும்பு, மார்ச் 13

படையினரின் சோதனை முகாமில் நிறுத்தப்படாது சென்ற பஸ் ஒன்றின் மீது படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பஸ்ஸில் இருந்த பயணிகளில் மூவர் கடும் காயத்துக்கு உள்ளானார்கள்.

இந்த சம்பவம் நேற்று நீர்கொழும்பு — கொழும்பு பிரதான வீதியில் இடம்பெற்றது.

வத்தளை சோதனை நிலையத்தில் வைத்தே பஸ் மீது படையினர் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தி இருந்தனர். (இ-6)

## புலிகளின் தாக்குதலில் வாகரையில் ஹெலி சேதம்

சாவகச்சேரி, மார்ச் 13

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகள் மீது தாக்குதல் நடத்த முற்பட்ட ஸ்ரீலங்கா விமானப்படை ஹெலிக்கொப்டர் ஒன்று விடுதலைப் புலிகளின் எதிர்த்தாக்குதலுக்கு உள்ளாகி சேதமடைந்தது.

மட்டக்களப்பில், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் உள்ளவாகரைப் பகுதியில் நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றது.

விடுதலைப் புலிகளைத் தாக்குவதாகக் கூறிக்கொண்டு மக்கள் இலக்குகள் மீது தாக்குதல் நடத்திக்கொண்டிருந்த ஹெலிகளில் ஒன்றே விடுதலைப் புலிகளால் தாக்கப்பட்டது.

சேதமான ஹெலி கடும் பிரயத்தனத்தின் பின்னர் இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசத்துக்குள் கொண்டு செல்லப்பட்டு அவசரமாகத் தரையிறக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (இ-7)

## புலிகளின்விமானஓடுபாதை குண்டு வீச்சால் சேதமாம்!

வன்னிப் பகுதியில் காட்டுப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகளின் விமான ஓடுபாதை மீது ஸ்ரீலங்கா வான்படையைச் சேர்ந்த விமானங்கள் கடந்த ஞாயிறன்று குண்டு வீசித் தாக்குதல் நடத்தி, சேதம் விளைவித்து இருப்பதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

ஆறு இலகு விமானங்கள் புலிகளிடம் இருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் நம்புவதாகவும்—

இதுவரை புலிகள் அந்த விமானங்களை தாக்குதலுக்கு பயன்படுத்தவில்லை என்றும்— அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-6)

## வெல்லாவெளித் தாக்குதலின் போது பவள்கவச வாகனமும் சேதம்!

### ஆயுதங்களும் பெருமளவு கைப்பற்றப்பட்டன

சாவகச்சேரி, மார்ச் 13

மட்டக்களப்பு வெல்லாவெளியில் விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் நடத்திய 20 நிமிட நேரத் தாக்குதலின் போது உதவிக்கு வந்த அணி மீதும் புலிகளால் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதன்போது பவள் கவசவாகனம் ஒன்றும் விடுதலைப் புலிகளால் தாக்கிச் சேதமாக்கப்பட்டது.

இதேவேளை வெல்லாவெளி அதிரடிப் படை முகாம் மீதும் விடுதலைப் புலிகளால் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதனால் முகாம் சிறிது சேதத்துக்கு உள்ளானது என்று தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

வெல்லாவெளியில் இழப்புகள் எதுவுமின்றி விடுதலைப் புலிகளால் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் பல ஆயுத தளபாடங்களும் கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்ட ஆயுத தளபாடங்கள் வருமாறு:-

(4ஆம் பக்கம் பார்க்க)

## கொல்லப்பட்ட 23 பேரில் இருவர் இன்ஸ்பெக்டர்கள்

மட்டக்களப்பு மாவட்டம் வெல்லாவெளியில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் உயிரிழந்தவர்களில் 3 அதிகாரிகளும், 20 படையினரும் அடங்கி இருப்பதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் நேற்றுத் தெரிவித்தது.

இந்தத் தாக்குதலின் போது விசேட அதிரடிப் படையின் இரண்டு இன்ஸ்பெக்டர்களும், ஒரு சப்இன்ஸ்பெக்டரும், 20 விசேட அதிரடிப் படையினரும் கொல்லப்பட்டதாகவும், ஐந்து படையினர் காயமடைந்ததாகவும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்த சிப்பாய்கள் அம்பாறை பெரியாஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வருகின்றனர். (இ-7)

## மட்டக்களப்பில் பொலீஸார் காயம்

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிக் குடியில் விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதல் ஒன்றில் ஸ்ரீலங்கா பொலீஸார் ஒருவர் படுகாயமடைந்தார்.

சிகை அலங்கரிப்பு நிலையமொன்றினுள் இருந்த இரு பொலீஸாருக்குக் காவலுக்கு நின்ற பொலீஸாரே தாக்குதலுக்கு இலக்கானார்கள். [இ 7]

## பாரிய தாக்குதல் நடத்த புலிகள் தயாராகின்றனர்

கொழும்பு, மார்ச் 13

வடக்கிலும், கிழக்கிலும் மட்டுமன்றி தெற்கில் உள்ள பொருளாதார மையங்கள் மீதும் விடுதலைப் புலிகள் பாரிய தாக்குதல்களை நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளதாக—

இராணுவப் புலனாய்வுப் பகுதிக்குத் தகவல்கள் கிடைத்துள்ளதாம்.

''சண்டே லீடர்'' பத்திரிகையின் பாதுகாப்புச் செய்தியாளர் இது குறித்து எழுதியுள்ளார்.

அரசாங்கப் படைகள் விரைவில் மிகப்பெரிய தாக்குதல் ஒன்றை நடத்தவிருக்கிறார்கள் என்பதனை அறிந்து கொண்ட விடுதலைப் புலிகள்—

அதனைத் தடுக்கு முகமாக படையினரின் தாக்குதலுக்கு முன்னதாகவே தாம் பெரிய தாக்குதல்களை நடத்த ஆயத்தமாகி வருவதாக— புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன என்று பிரஸ்தாப பாதுகாப்புச் செய்தியாளர் தெரிவிக்கிறார்.

எல்லைப்புறக் கிராமங்கள் மீதும் விடுதலைப் புலிகளின் கடும் தாக்குதல்கள் நடைபெறும் என்று பாதுகாப்புப் படையினர் எதிர்பார்க்கின்றனராம். [அ]

## புத்தூரில் காணாமற்போன மூவர் வவுனியா ஆஸ்பத்திரியில் சிகிச்சை

### இரண்டு மாதங்களின் பின் உறவினருக்குத் தகவல்

மந்திகை, மார்ச் 13

புத்தூர் கிழக்கில் தமது வீடுகளைப் பார்க்கச் சென்ற போது காணாமல்போனவர்கள் எனக்கருதப்பட்ட மூவர் வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரியவருகிறது.

கடந்த ஜனவரி 7ஆம் திகதி புத்தூர் கிழக்கு குருநாதர் கோவிலடியில் வீடு பார்க்கச் சென்ற நூற்றுக்கணக்கான மக்களை திடீரெனச் சுற்றி வளைத்த இராணுவம் துப்பாக்கிச் சூடு, ஷெல் வீச்சுக்கள் மத்தியில் அவர்களில் பலரை பிடித்துச் சென்றது தெரிந்ததே.

இச்சம்பவத்தின் போது [illegible] சேர்ந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

## குமரபுரம் படுகொலைகள்: 3 படையினரை சாட்சிகள் அடையாளம் காட்டினர்

கிளிவெட்டி, குமரபுரம் கிராமத்தில் 24 அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான அடையாள அணிவகுப்பின் போது மூன்று இராணுவத்தினரை மட்டும் சாட்சிகள் அடையாளம் காட்டினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத்தினரை அடையாளம் காட்டுவதற்காக 24 சாட்சிகள் திருகோணமலை மேல் நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

கடந்த 9 ஆம், 10 ஆம் 11 ஆம் திகதிகளில் இந்த அடையாள அணிவகுப்புகள் இடம்பெற்றன.

படுகொலைச் சம்பவத்தில் ஈடுபட்ட மற்றைய ராணுவத்தினர் நீதிமன்றத்துக்கு கொண்டு வரப்படவில்லை என்று கூறப்படுகிறது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள றலி [ஆண்] சைக்கிள் விற்பனைக்கு உண்டு. பார்வையிடும் நேரம் காலை 11-00க்கும் மாலை 4-00க்கும் இடையில் தொடர்பு: அ. சிறீதரன், வட்டப்பாதி (கோபால் ரியூட்டரி) புலோலி மேற்கு. (40345)

21 இழை — பச்சை நிறம்— 5 இஞ்சி, 21 இழை — பச்சை நிறம் — 7 இஞ்சி புதிய வலைகள் விற்பனைக்குண்டு. துரை, துன்னாலை வடக்கு, பிறேம் நாத் வீதி. (41006)

### காணி விற்பனைக்கு

தும்பளையில் உள்ள தம்புறுவளைப் பிள்ளையார் கோயிலுக்கும், லூர்து மாதா கோவிலுக்கும் இடையே உள்ள காணி 5½ பரப்பு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க. சச்சிதானந்தம், மூத்த தம்பியார் வளவு, வதிரி, கரவெட்டி வடக்கு, கரவெட்டி. (40340)

### தேவை

வீட்டு அலுவல்களைக் கவனிப்பதற்கு 40 வயதிற்கு மேற்பட்ட பெண் உதவியாளர் தேவை. தொடர்பு கொள்ளவும்: க. துரைரட்ணம், ஸ்ரீஸ்கபே, பிரதான வீதி, பருத்தித்துறை. (41014)

பழைய கொப்பி, புத்தகம் கொள்வனவு செய்யப்படும். அண்ணா பாம், பொன்நகர் திரு முறிகண்டி, கிளிநொச்சி. (C/4105)

### தவறிவிட்டது

யாழ். பல்கலைக்கழக பட்டதாரியான வைத்திய கலாநிதி செல்வி அருந்ததி இராசையா ஆகிய எனது பட்டதாரிச் சான்றிதழ் (Original) 20-2-96 அன்று கிளாலி தாண்டிக்குளம் ஊடான கொழும்புப் பிரயாணத்தின் போது தொலைந்து விட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்குறிப்பிட்ட முகவரியில் தந்துதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். நாவற்குழி சிகிச்சை நிலையம், கேரதீவு வீதி, நாவற்குழி அல்லது Mrs. R. Sathasivam Studio Satha, 62B, Kotahen Street, Kotahena. [40940]

### ஆனந்தம் சீயாக்காய்

சித்த மருத்துவ ஆலோசனையின்படி மூலிகைகள் சேர்த்து தயாரிக்கப் பெற்ற ஆனந்தம் சீயாக்காய் பவுடர் கூந்தல் அழகியுடனும் கோபுர சின்னத்துடனும் வந்தது. இப்போ கோபுர சின்னத்துடன் மட்டும் வருகிறது. தற்போதைய சீதோஷ்ண நிலைக்கேற்றவாறு சிரசின் தனித்துவத்தைப் பேணுமுகமாக தயாரிக்கப் பெற்றது ஆனந்தம் சீயாக்காய் பவுடர். கேட்டு வாங்கி பாவித்து பலன்பெறுவீர்களாக. (40967)

## மலாயன் ஒய்வூதியம்

சாவகச்சேரி, மார்ச் 13

மலாயன், சிங்கப்பூர் ஓய்வூதியம் பெறுபவர்களின் பெப்ரவரி மாதத்திற்கான ஓய்வூதிய வவுச்சர்களும் காசோலைகளும் யாழ். செயலகத்தினால் அந்தந்த வங்கிகளுக்கு நேரடியாக அனுப்பிவைக்கப் பட்டுள்ளன.

எனவே இந்த ஓய்வூதியம் பெறுபவர்கள் அந்தந்த வங்கிகளுடன் தொடர்பு கொண்டு தமது ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்ளும்படி கோட்டுக் கொள்ளப்படுகின்றனர். (இ-ரீ-7)

### ஸ்கூட்டர் உதிரிகள்

ஸ்கூட்டர் உதிரிகளைப் பெற்றுக் கொள்ளவும், அவற்றைப் பழுதுபார்க்கவும். ஷண் மோட்டோஸ், பழைய ஸ்கூட்டர்கள் கொள்வனவும் செய்யப்படும். யாழ் வீதி, கிளிநொச்சி, ஹப்பி துணியகம் அருகில், கிளை: கண்டி வீதி, மீசாலை. (சி-4096)

### மணமகன் தேவை

ஆசிரியர் சேவையிலிருந்து ஓய்வுபெற்று ஆலய அர்ச்சகரான தந்தை A/L படித்த 33 வயது நிரம்பிய பரணி, உதயத்தில் செவ்வாய், கிரகபாவம் 55 உள்ள அழகிய மகளுக்கு உள் நாட்டிலோ, வெளிநாட்டிலோ நிரந்தரத் தொழிலும், நற்பண்பும் உடைய மணமகனைத் தேடுகிறார். சோ. ரங்கநாதஐயர், நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி. (40934)

## - போஸ்கோ -

பாடசாலை உபகரணங்கள், அலுவலக பாவனைப் பொருள்கள், காகிதாதிகள் விற்பனையாளர்.

**கிளிநொச்சியில்**
யாழ். வீதி,
(நீதிமன்று முன்பாக),
கிளிநொச்சி.

**சாவகச்சேரியில்**
யாழ். வீதி,
(பழைய பெற்றோல் செட்),
சாவகச்சேரி.

[சி-4099)

## அறிவித்தல்

### யாழ். பல்கலைக்கழகம்

எழுதுநர்கள், நூலக உதவியாளர்கள், சிறாப்பர்கள், களஞ்சியக் காப்பாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான பதவியுயர்வுகள்

**1991, 1992, 1993, 1994**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் மேற்படி பதவியினரிடமிருந்து அவர்களைத் தரம் II இற்குப் பதவியுயர்த்துவதற்கான எழுத்துப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பிக்கத் தகுதியுடையோர் இதற்கென குறித்தொதுக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் உள்ள எமது உப அலுவலகத்திலிருந்தோ, கிளிநொச்சி விவசாய பீடத்தில் உள்ள அலுவலகத்திலிருந்தோ பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை **25-03-96** க்கு முன்னர் மேற்படி அலுவலகங்களில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம்

1996-03-11. (சி-4104)

## 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### துரைசிங்கம் சரவணன்துரை

(பழைய மாணவன், அச்சுவேலி மகாவித்தியாலயம்)

தோற்றம்: **27 - 04 - 1971** மறைவு: **13 - 03 - 1985**

உணர்வாகி உயிராகி ஒளியானாய்-
ஓயாத உன் நினைவால் ாடுகிறோம்-
மாயாத உடல் கொண்டு மாநிலத்தில்
வாயார வாழ்த்துதற்கு வாராயோ.

அப்பா, அம்மா, அம்மம்மா,
பெரியம்மா குடும்பத்தினர்.

நாவற்காடு,
அச்சுவேலி. (41007)

யாழ்ப்பாண மேலதிக மாவட்டப் பதிவாளர்

## அமரர் அகிலேசர் பொன்னம்பலம்

அவர்களின்

## 33-ம் நாள் நினைவலைகள்

தோற்றம்: **29 – 04 – 1942**



மறைவு: **10 – 02 –1996**

மறைந்தும் மறையாது மனங்களில் நிறைந்து
உறையாத நினைவுகளை உள்ளகத்தே விதைத்து
நிறை வோடு பசுமை நினைவுகளை நெஞ்சகத்தே
- விரித்த உத்தமரே
இறைஞ்சுகிறோம் உமது ஆத்ம சாந்திக்காக.

காணி, மேலதிக மாவட்டப் பதிவாளரும்
பணியாளர்களும்,
[illegible]

# இப்படியும் நடக்கிறது!

கொழும்பு, மார்ச் 13

ஏற்றுமதிக்காக கொண்டுவரப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட்ட கோழி இறைச்சி, முந்திரிப்பழத்துடன் குழந்தைகளின் தொப்புள் கொடிகளும் வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாம்.

இவை வைக்கப்பட்டிருந்த குளிரூட்டப்பட்ட இந்த களஞ்சியம் தெஹிவளை — கல்கிசை மாநகரசபை சுகாதார அதிகாரிகளினால் சீல் வைக்கப்பட்டுள்ளது.

ஆஸ்பத்திரிகளில் இருந்து சேகரிக்கப்பட்ட குழந்தைகளின் தொப்புள் கொடிகள் பெண்களின் அழகு சாதனப் பொருள்கள் தயாரிப்பதற்காக வெளிநாடுகளில் பயன்படுத்தப்படுவதாகவும்—

பாரிஸுக்கு இவை ஏற்றுமதி செய்யப்பட இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

## றெனி மூக்குக் கண்ணாடி அகம்

உங்கள் கண்களை சரியாகப் பரிசோதித்து கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

### றெனி மூக்குக் கண்ணாடி அகம்

கண்டி வீதி,
[யோகா மருந்தகத்துக்கு உள்ளே]
சாவகச்சேரி.

பிரதான வீதி,
[உதயன் கிளை நிலையத்துக்கு மேல்]
பருத்தித்துறை.

(40347)

உ
அம்பாள் துணை
மட்டுவில் வடக்கு
பன்றித்தலைச்சிக் கண்ணகை அம்மன் தேவஸ்தானம்

## அறிவித்தல்

**18-03-96** பங்குனித் திங்கள் திருவிழாவை முன்னிட்டு **14 -03- 96** வியாழன் பகல் 3-00 மணியளவில் லொத்தர் மூலம் கடைகள் கொடுக்கப்படும். பணம் முழுவதும் உடன் கட்டி பற்றுச்சீட்டுப் பெற்றுக் கொள்ளவும்.

கோவில் வீதிக்கு அப்பால், புத்தூர் வீதியில், வயல் வெளியில் கடைகளுக்கு இடம் ஒதுக்கப்படும்.

சி. சிவகுரு
தர்மகர்த்தா

(41022)

# மரண அறிவித்தல்கள்

### கணபதிப்பிள்ளை சதாசிவம்

காரைநகர், பாலாவோடையைப் பிறப்பிடமாகவும், தற்பொழுது கல்லூரி வீதி, சங்கத்தானையை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய கணபதிப்பிள்ளை சதாசிவம் (புறோக்கர்) 11 - 03 - 1996 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - மீனாட்சியின் ஏக புத்திரனும், காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புக் கணவரும், கமலாதேவி (ஆசிரியை, யாழ். வட்டு. இந்துக்கல்லூரி), யோகேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், வேலாயுதத்தின் (ஜேர்மனி) அன்பு மாமனும், காலஞ்சென்ற காசிவதிப்பிள்ளையின் சகோதரரும், காலஞ்சென்ற கந்தையா, துரைராஜா (கணக்காளர்), சரஸ்வதி, செல்லத்துரை (பாய்க்கடை), சிவப்பிரகாசம் (ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்), சிவபாக்கியம் ஆகியோரின் மைத்துணரும், வசந்தியின் (ஜேர்மனி) பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று (12-03-96) நடைபெற்றன.

தகவல்:
கமலாதேவி (மகள்)
(ஆசிரியை)

கல்லூரி வீதி,
சங்கத்தானை. (40944)

### கணபதிப்பிள்ளை சின்னத்தங்கம்

(சுழிபுரம் மேற்கு)

சுழிபுரம் மேற்கைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சின்னத்தங்கம் அவர்கள் கொழும்பில் காலமானார்.

அன்னார் டாக்டர் கணபதிப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், க. சிவராசா (கொழும்பு), திருமதி பத்மாவதி ஜெகதீசன் (கனடா), திருமதி இரத்தினேஸ்வரி அருளானந்தம் (கொழும்பு), க. சிவானந்தம் (சங்கானை ப. நோ. கூ. சங்கம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று புதன்கிழமை 13-03-96 கொழும்பில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. சிவானந்தம்
(மகன்)

தற்காலிக முகவரி:
C/o கிருஷ்ணகோபால்
உடைச்சியா வளவு,
நவிண்டில்,
கரவெட்டி. (41023)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தண்ணீர் அவசரம்!

நூறு வருடங்களுக்குப் பின்னர் வரும் கடும் வரட்சி, இந்த ஆண்டில் ஏற்படக் கூடும் என்று வானியலாளர்களும், சோதிடவியலாளர்களும் ஆருடங்கள் கூறி வருகின்றனர். அந்த நிலைமை உண்மையாகவே வந்து விடுமோ என்று அச்சமடையும் அளவுக்கு வெயில் வெப்பம் இப்போதே வாட்டத் தொடங்கிவிட்டது.

கிணறுகள் மற்றும் நீர் நிலைகள் வற்றத் தொடங்கி விட்டன. தென்மராட்சி, வன்னிப் பிரதேசங்களில் பல பகுதிகளில் தண்ணீர்த் தட்டுப்பாடு ஆரம்பமாகிவிட்டது.

இன்னும் இரண்டொரு வாரங்களில் தண்ணீர் தட்டுப்பாடு மிகவும் மோசமடையலாம்.

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்த ஐந்தே கால் லட்சம் மக்களும் தென்மராட்சி, வடமராட்சி, வன்னிப் பிரதேசங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளதால் இப்பகுதிகளின் சனத்தொகை திடீரெனப் பெருத்துள்ளது. அதனால் ஏனைய தேவைகளைப் போன்றே தண்ணீர்த் தேவையும் அதிகரித்துள்ளது.

இந்தத் தருணம் பார்த்து, வானம் பொய்த்ததால் தண்ணீர்ப்பிரச்சினை பூதாகாரமாக மாறவுள்ளது.

மனிதனின் உடலியல் தொழிற்பாட்டுக்கும் உடல் இயக்கத்துக்கும் தண்ணீர் பிரதானமானது. நாளில் முழுவேளை உணவில்லாமலும் இருக்கலாம்; ஆனால் தாகம் வரும் போது தண்ணீர் அருந்தாவிடில் உயிர்போவது போலாகிவிடும்.

இப்போது ஆரம்பித்துள்ள வரட்சி தொடர்ந்து ஏழு. எட்டு மாதங்களுக்கு நீடிக்கும் ஆபத்து உண்டு. எனவே இப்போதிருந்தே வரட்சியை எதிர்கொண்டு தண்ணீர்ப் பிரச்சினையை இயன்றளவு குறைப்பது குறித்துச் சிந்திக்கப்பட வேண்டும்.

தண்ணீர் தட்டுப்பாடு நீடிப்பின் பசி, பஞ்சம், நோயினால் மனிதர்கள் பெரும் எண்ணிக்கையில் மடிய நேரிடலாம்.

தமிழ்பகுதிகளை பொறுத்த மட்டில் அரசாங்கத்தின் பல வித தடைகளாலும், கட்டுப்பாடுகளாலும், புறக்கணிப்புகளாலும், போர்க் கொடுமைகளினாலும் தமிழர்களின் வாழ்க்கை மிகமிகச் சுருங்கிவிட்டது. அடிப்படைத் தேவைகள் யாவுமே கிடைத்தற்கரிய மருந்துகள் போலாகி விட்டன.

பட்டகாலிலே படும் கெட்ட குடியே கெடும்; பனையால் விழுந்தவனை மாடேறி மிதிப்பது; என்ற மூதுரைகள் இப்போது தமிழர்கள் எல்லோருக்குமே பொருந்துவன ஆகிவிட்டன.

எனினும் மனம் சோர்ந்து விடலமா?

வாழ இயலும் மட்டும் வாழுவோம் என்ற மன உறுதியுடன் வரட்சியால் ஏற்படக் கூடிய பாதிப்புகளை இயன்ற அளவு குறைப்பதற்கான வழிமுறைகளை இனங்கண்டு அவற்றைச் செயற்படுத்துவதில் உடனடிக் கவனம் செலுத்த வேண்டும். விழிப்புடன் செயற்பட வேண்டும்.

அரச திணைக்களங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், சர்வதேச தொண்டர் அமைப்புகள் ஆகியன ஒன்று சேர்ந்து இந்தப் பிரச்சினையை அணுகுதல் அவசியம்.

வரட்சியினால் சூடான் போன்ற நாடுகளில் ஏற்பட்ட மக்கள் அழிவு இங்கு உண்டாகாமல் தடுக்க உடனடிச் செயற்பாடு அவசியமும் அவசரமுமாகும்.

## ஆஸ்பத்திரிப் பாயுடன் மறையும் நோயாளர்!

மந்திகை, மார்ச் 13

மந்திகை ஆஸ்பத்திரி வார்ட்டில் தங்கி இருந்து சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கு படுப்பதற்காக வழங்கப்படும் பாய்கள் மாயமாக மறைந்து வருகின்றனவாம்.

வார்ட்டில் கட்டில்கள் போதுமானதாக இருக்காததால் நிலத்திலும் நோயாளர் தங்குவதற்கு வசதியாக, நோயாளர் நலன் கருதி, நிர்வாகம் பாய்களை வழங்கி வருகிறது.

ஆனால் சில நோயாளர்கள் சுகமடைந்து வீடு செல்லும் வேளைகளில் இப்பாய்களை ஒப்படைப்பதில்லை. தம்முடன் கொண்டு சென்றுவிடுகிறார்களாம்.

கடந்த மாதம் நோயாளர்களுக்கென ஒரு வார்ட்டுக்குக் கொடுக்கப்பட்ட சுமார் 90 பாய்களில் தற்போது 20 பாய்கள் வரையிலேயே உள்ளன என்று தெரியவருகிறது. மிகுதிப் பாய்கள் காணாமல் போய்விட்டன. இதனால் புதிதாக வரும் நோயாளர்களுக்கு பாய்கள் வழங்க முடியாத இக்கட்டான நிலை அந்த வார்ட்டுக்கு ஏற்பட்டுள்ளது.

தங்கி சிகிச்சை பெறும் நோயாளர்கள் ஏனையவரின் நலன் கருதி, தமக்கு வழங்கப்படும் பாயை வீடு செல்லும் போது திருப்பி ஒப்படைத்துவிட்டுச் செல்லுமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது. (இ-15)

### தாக்குதலில் காணாமற்போன

## குருநகர் மீனவர்கள் மூவரது சடலங்கள் மீட்பு!

சாவகச்சேரி, மார்ச் 13

இரணைதிவுக் கடற்பரப்பில் கடந்த வெள்ளிக்கிழமை காணாமல் போன மீனவர்களில் மூவரின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

குருநகரைச் சேர்ந்த நீக்கிலாஸ் தர்மநாயகம் (48 வயது), அவரது மகனான தர்மநாயகம் விமல் (17 வயது), குருநகரிலிருந்து இடம்பெயர்ந்து நாச்சிக்குடாவில் வசித்த சூசைப்பிள்ளை வவா அல்லது தேவதாஸ் (45 வயது) ஆகிய மூவரினது சடலங்களே கண்பிடிக்கப்பட்டுள்ளன

கடந்த வெள்ளி நள்ளிரவு இரணைதீவுக் கடற் பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மீது ஸ்ரீலங்கா கடற்படையினர் கண்மூடித்தனமாக தாக்குதலை நடத்தினார்கள்.

இதன்போது கொல்லப்பட்ட இரு மீனவர்களது சடலங்களையும்—

சில மீனவர்களையும்— ஸ்ரீலங்காக் கடற்படையினர் தம்முடன் கொண்டு சென்றனர்.

இச் சம்பவத்தில் காணாமற்போன மீனவர்களில் மூவரது சடலங்கள் தற்போது மீட்கப்பட்டுள்ளதால் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை ஐந்தாக அதிகரித்துள்ளது. (இ-7)

### கொப்பேகடுவ மரணம்:

## விசாரணைக் குழுவிலிருந்து நீதியரசர் ராஜினாமா

லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ மற்றும் ஒன்பது படையினரின் மரணம் குறித்து விசாரிக்கும் ஆணைக் குழுவின் உறுப்பினர்களில் ஒருவரான நீதியரசர் டி. பி. எஸ். குணசேகரா ராஜினாமாச் செய்துள்ளார்.

நீதியரசர் குணசேகரா, டென்சில் கொப்பேகடுவவுடன் ஒன்றாகப் படித்தவர் என்பதால் அவர் விசாரணை மன்றில் இருப்பது உகந்ததல்ல என்று ஆணைக்குழுவின் சக உறுப்பினர்களில் ஒருவர் கருத்து வெளியிட்டதைத் தொடர்ந்தே ராஜினாமா இடம்பெற்றதாகச் சொல்லப்படுகிறது.

இதேவேளை மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் உபவன்ச யாப்பாவின் கடவுச்சீட்டைப் பறிமுதல் செய்யுமாறு ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளது.

திரு. யாப்பா விரைவில் சொலிஸிட்டர் ஜெனரலாகப் பதவி ஏற்கவுள்ளவர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

### இடம்பெயர்ந்து

## முல்லைத்தீவு சென்றோர் ஓய்வூதியம் பெற வசதி

யாழ். மாவட்டத்திலிருந்து முல்லைத்தீவு மாவட்டத்திற்கு இடம்பெயர்ந்து முல்லைத்தீவு அரசாங்க அதிபரிடம் ஏற்கனவே தமது 1995 நவம்பர், டிசம்பர் மற்றும் 1996 ஜனவரி மாத ஓய்வூதியங்களைப் பெற்றவர்களுக்கு 1996 பெப்ரவரி மாத ஓய்வூதியத்தை வழங்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி புதுக்குடியிருப்பு பகுதியில் வசிப்பவர்கள் மக்கள் வங்கி, முல்லைத்தீவுக் கிளையிலும்—

கரைதுறைப்பற்று பகுதியில் வசிப்பவர்கள் கிராமிய வங்கி, கரைதுறைப்பற்று பல நோ. கூ. சங்கத்திலும்—

ஒட்டுசுட்டான் பகுதியில் வசிப்பவர்கள் — கிராமிய வங்கி, முத்துஐயன்கட்டு பல நோ. கூ. சங்கத்திலும் —

துணுக்காய் பகுதியில் வசிப்பவர்கள் கிராமிய வங்கி, துணுக்காய் பல நோ. கூ. சங்கத்திலும்—

பாண்டியன்குளம்(மாந்தை கிழக்கு) பகுதியில் வசிப்பவர்கள் கிராமிய வங்கி, பனங்காமம்பற்று பல நோ. கூ. சங்கத்திலும் தங்கள் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

இவை தவிர இலங்கை வங்கி முல்லைத்தீவு, இலங்கை வங்கி — மாங்குளம், மக்கள் வங்கி — மாங்குளம், கிராமிய வங்கி—விசுவமடுக்குளம் விவசாயிகள் பல நோ. கூ. சங்கம் ஆகியவற்றில் தங்கள் ஓய்வூதியங்களைப் பெற விருப்பம் தெரிவித்தவர்களுக்கு அவரவர் விருப்பம் தெரிவித்த வங்கிகளிலேயே ஓய்வூதியங்களைப் பெற வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் அடையாள ஆவணங்களுடன் சென்று அதனைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும்—

கொடுப்பனவுக்கான ஆவணங்கள் கொடுப்பனவு நிலையங்களுக்கு ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளன என்றும்— முல்லைத்தீவு கச்சேரிக் கணக்காளர் தெரிவித்துள்ளார். (உ)

## நிதித்துறை அறிவித்தல் வைப்பகத்திற்கு வருக

கீழ்க்குறிப்பிடுவோரை முதன்மைச்சாலை, நெல்லியடியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்திற்கு இன்று 13 ஆம் திகதி காலை 11-00 மணிக்கு அடையாள ஆவணங்களுடன் வருகை தருமாறு நிதித்துறை கோரி உள்ளது.

★ இராசரத்தினம் ரஞ்சன் — விநாயகர் வீதி, அல்வாய் தெற்கு.

★ சாந்தா அபிமாணசிங்கம் — (Attorney at Law மாணிக்கசோதி மாஸ்ரரின் சகோதரி) துன்னாலை தெற்கு.

★ கதிரவேலு நடராஜா — மே/பா. S.தேவராஜா, கணேஸ் ஐயர் வீதி, துன்னாலை மேற்கு.

★ செ. நம்பியார்குரன் — மே/பா. செ. இரத்தினாம்பிகை, பழைய வளவு, நுன்னாலை கிழக்கு.

★ லட்சுமி தம்பிப்பிள்ளை — சாந்தி இல்லம், துன்னாலை மேற்கு.

★ வேலன் செல்வன் (மலர்) — தழையபுலம், துன்னாலை தெற்கு.

★ பவானி ஆழ்வாப்பிள்ளை — ''பவானி இல்லம்'' துன்னாலை தெற்கு.

★ இரத்தினம் பொன்ராசா — மே/பா கதிர்காமநாதன் ''கோகுலம்'', கரவெட்டி மத்தி.

★ வல்லிபுரம் காந்திமதிநாதன் — நெல்லியடி ப. நோ. கூ. ச, கட்டைவெளி, கரவெட்டி.

★ கலைச்செல்வி செல்லத்துரை — மே/பா. S. யோகேஸ்வரி, புதுத்தோட்டம், நெல்லியடி கிழக்கு.

★ ராஜேந்திரம் — மே/பா. புளோராமரியா, தாளையடி தபாற்கந்தோர், தாளையடி.

★ பொன்னையா மாணிக்கம் — கணேசன் இல்லம், கோட்டா கலட்டி, தும்பளை மேற்கு.

★ தாமோதரம்பிள்ளை தம்பியப்பா — சாளம்பை, புலோலி மேற்கு, தம்பசிட்டி.

★ பராசக்தி நேசராசா — மே/பா. V. பாலசுப்பிரமணியம், 1ஆம் கட்டை, பிரதான வீதி, புலோலி மேற்கு.

★ கணேசலிங்கம் — மே/பா A. யோகேந்திரன், தேவி சிவனம், நைணாவத்தை, புலோலி தெற்கு.

★ கதிர்காமு சங்கரப்பிள்ளை — பெரியவளவு, புற்றாளை, புலோலி தெற்கு.

---

கீழ்க்குறிப்பிடுவோரை கச்சாய் வீதி, சாவகச்சேரியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்திற்கு இன்று 13 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு அடையாள ஆவணங்களுடன் வருகை தருமாறு நிதித்துறை கோரி உள்ளது.

★ தவமணி சந்திரராஜா — இயக்கச்சி, பளை.

★ A. குருசுமுத்து—மே/பா ராசுநாயகம், மிருசுவில்.

★ நேசமலர் இராஜன் — உசன், மிருசுவில்.

★ வசந்தா ஆசீர்வாதம் — உசன், மிருசுவில்.

★ சுகந்தி நலகுலசிங்கம் — குடியிருப்பு வீதி, மந்துவில், கொடிகாமம்.

★ சிவபாக்கியம் குகதாஸ் — மே/பா சிலின்பீற்றர், ஜெயந்தினி பீற்றர் மீசாலை வடக்கு, வேம்பிராய்.

★ செல்வராணி இராசையா — மீசாலை வடக்கு, கொடிகாமம், புத்தூர் சந்தி.

★ வைரமுத்து கிருஷ்ணதாசன் — மே/பா முத்தையா கிருஷ்ணபிள்ளை, சித்தி விநாயகர் கோவிலடி, மீசாலை தெற்கு.

★ சோமசுந்தரம் குலரஞ்சிதம் — மே/பா அ. அம்பிகைபாகன், மீசாலை மேற்கு.

★ கந்தர் ஆறுமுகம் அல்லது சுகிர்தராணி ஆறுமுகம் — மீசாலை.

★ காசிப்பிள்ளை சம்பந்தர் — மே/பா துரைசிங்கம், 1 ஆம் கட்டை அருகில், மட்டுவில் தெற்கு

★ தவமணி கந்தையா மே/பா (தம்பகாந்தம்பி ஒழுங்கை, மாவிட்டபுரம்) ச. யோகராசா, மட்டுவில் வடக்கு.

★ சண்முகம் கந்தசாமி — Lot No. 113, Btrighi முத்துவிநாயகர்புரம், ஒட்டுசுட்டான்.

★ ஆறுமுகம் சந்திரசேகரன் — மே/பா கனகரத்தினம், இல 12, ஆனந்தநகர், கிளிநொச்சி.

★ குமாரசாமி நாகேஸ்வரன் — மே/பா ஆர். குலசேகரம், மீனாட்சி அம்மன் கோவில் வீதி, சங்கத்தானை.

★ கோவிந்தர் துரைச்சாமி — மே/பா ஏரம்பு வல்லிபுரம், கோராவில், உடையார்கட்டு, முல்லைத்தீவு.

★ தையல்நாயகி ஆனந்தரட்ணம் — மாத்தனை கோவிலடி, செம்பியன் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு.

★ அரியமலர் பாலசுப்பிரமணியம் — இல. 48/4, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

★ காந்திமதி முருகமூர்த்தி — மே/பா S. அழகுரட்ணம், 4 ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.

★ M. பலியான்—மே/பா S. ஜோன்கெனற், சிலுங்கந்தாள், முருங்கன்.

★ C. சந்திராதேவி — (பண்ணாகம், சுழிபுரம்) புதுக்குடியிருப்பு. முல்லைத்தீவு.

★ பூரணநாயகி சிவபாதம் — மே/பா A. துரைராசா, 1479 இரட்ணபுரம், கிளிநொச்சி.

★ அமிர்தவள்ளி சண்முகம் — இல. 17, வண்ணாத்திக்குளம், கிளிநொச்சி.

★ கந்தையா மாப்பாண்பிள்ளை — ஆறுமுகத்தான் புதுக்குளம், ஓமந்தை.

★ ரூபா அல்லது பாமா —10ஆம், வாய்க்கால், ஐயனார் ஸ்ரேட்ஸ் (உதயன்), கிளிநொச்சி.

★ செல்லத்துரை கிருஷ்ணமூர்த்தி—இல. 89, 1ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

★ பாலசுந்தரம் இராமச்சந்திரன் — மே/பா. N. தவமனோகரன், நெல்லுக்குளம், வவுனியா.

★ ராசமலர் தர்மவரதன் — இல 99, பெரியபண்டிவிரிச்சான், மடு.

★ கனகம்மா பேரம்பலம் — இல 10, மூன்றாம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறை.

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் இல்லாத பகுதியைக் கைப்பற்றிய ஆத்திரத்தில் எம்மைத் தாக்கினார்கள்

## விடுதலையானவர்களில் ஒருவர் தெரிவிப்பு

வடமராட்சி, மார்ச் 13

யாழ்ப்பாணத்தை கைப்பற்றிய படையினர், அங்கு மக்கள் இல்லாததால் மிகவும் ஆத்திரமடைந்து எம்மைத் தாக்கினார்கள்.

நேற்று முன்தினம் பலாலியிலிருந்து விடுதலையானவர்களில் ஒருவரான பண்டத்தரிப்பு பனிப்புலம் வாசியான கதிரமலை சிவனேஸ்வரன் (22 வயது) என்பவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

பனிப்புலத்திலுள்ள எனது வீட்டுக்கு உடுப்புக்களை எடுத்து வருவதற்காக கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி சென்றேன்.

அங்கு உடுப்புக்களை எடுத்துக் கொண்டிருந்தபோது, திடீரென சுமார் முப்பதுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் வந்தனர்.

அவர்கள் என்னைச் சூழ்ந்து கொண்டதும் நான் எனது கைகளை உயர்த்தியவாறு வீட்டு முற்றத்துக்கு வந்தேன்.

எனது ஷேர்ட்டைக் கழற்றிய படையினர் அதனால் எனது கண்களைக் கட்டினார்கள். பின்னர் தமது டிரக் வாகனம் ஒன்றில் ஏற்றி பலாலி இராணுவ முகாமுக்கு கொண்டு சென்றனர்.

அங்கு தொடர்ச்சியாக மூன்று தினங்கள் சாப்பிடுவதற்கு உணவோ, குடிப்பதற்கு தண்ணீரோ அவர்கள் தரவில்லை.

எந்நேரமும் அடியும், உதையும் தான் கிடைத்தன.

இதன் பின்னர் ஏனைய கைதிகளுடன் என்னையும் ஓர் அறையில் வைத்துப் பூட்டினர். குளிப்பதற்கோ, முகம் கழுவுவதற்கோ படையினர் அனுமதிக்கவில்லை அறைக்குள்ளேயே வைத்துப் பூட்டிவிட்டார்கள்.

இதன் காரணமாக அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த பல கைதிகளுக்கு அம்மை நோய் ஏற்பட்டது.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினர் வந்து எம்மைப் பார்வையிட்ட பின்னர் எம்மீதான படையினரின் தாக்குதல்கள் குறைந்தன.

இப்படி அவர் கூறினார்.

வலிகாமத்தில் பொது மக்களின் வீட்டுப் பாவனைப் பொருள்கள் மற்றும் ஏனைய உடமைகளை படையினர் டிரக் வாகனங்களில் ஏற்றி வந்து முகாமில் சேர்த்து வைத்திருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது என்றும் அவர் சொன்னார்.

(இ-173)

# தபாலகங்களுக்கு இலக்கங்கள் பயன்படுத்தும் நடைமுறை அமுல்

## யாழ். மாவட்ட இலக்கங்கள் அறிவிப்பு

சாவகச்சேரி. மார் 13

இலங்கை முழுவதும் உள்ள தபால் நிலையங்களுக்கும், உபதபால் நிலையங்களுக்கும் இலக்கங்களை (Pin Code) பயன்படுத்தும் புதிய நடைமுறை கொண்டுவரப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட தபால் நிலையங்களுக்கும் உப தபால் நிலையங்களுக்கும் வழங்கப்பட்ட இலக்கங்கள் தபால்மா அதிபரினால் அறிவிக்கப்பட்டுள்ளன.

பிரதம தபால் நிலையங்களுக்கான இலக்கங்கள் வருமாறு:-

அளவெட்டி—3000, அனலைதீவு — 3010, அச்சுவேலி — 3015, சங்கானை — 3025, சாவகச்சேரி — 3030, சுழிபுரம் — 3040. சுண்டுக்குழி—3048, சுன்னாகம் — 3050, நெடுந்தீவு — 3070, யாழ்ப்பாணம் — 3075, கைதடி—3110, காங்கேசன்துறை — 3115, காரைநகர் — 3125, கரவெட்டி — 3135, ஊர்காவற்றுறை — 3150, கொடிகாமம் — 3165, கொக்குவில் — 3175. கோப்பாய்—3185, மானிப்பாய்— 3195, நயினாதீவு — 3205, பண்டத்தரிப்பு — 3210, பருத்தித்துறை — 3220, புங்குடுதீவு—3240, தெல்லிப்பளை — 3250, உரும்பிராய் — 3260, வட்டுக்கோட்டை — 3265, வண்ணார்பண்ணை — 3275, வல்வெட்டித்துறை — 3276, வசாவிளான் — 3285, வேலணை — 3290.

உப தபால் நிலையங்களுக்கான இலக்கங்கள் வருமாறு:

புத்தூர்—3019, மீசாலை—3032, ஏழாலை— 3051, மல்லாகம் — 3056, நெடுந்தீவு மேற்கு — 3072, அல்லைப்பிட்டி — 3076, ஆனைக்கோட்டை — 3077, சண்டிலிப்பாய்—3096, எழுவதீவு—3151, மிருசுவில் - 3168, வரணி — 3169, கோண்டாவில் — 3176, நீர்வேலி — 3188, இளவாலை — 3211, மாதகல்—3212, அல்வாய்—3221, குடத்தனை — 3222, நாகர்கோவில் — 3224, புலோலி — 3228, சித்தங்கேணி — 3269, தொண்டமனாறு — 3272.

(இ-7-ரி)

# வங்கியின் பிரதான கிளை: திறக்க சந்திரிகா உத்தரவு

யாழ்ப்பாணத்தில் இலங்கை வங்கியின் பிரதான கிளையை மீண்டும் திறக்கும்படி ஜனாதிபதி சந்திரிகா சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளாராம்.

இலங்கை வானொலி இச் செய்தியை தெரிவித்தது.

தேசிய சேமிப்பு வங்கியும், சுன்னாகம், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் அதன் நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் மென்றும் ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளனர் என்று தெரிவிக்படுகிறது. (இ-7)

## ஆயுதங்கள் மீட்பு

அக்குரஸ்ஸ பொலீஸ் பிரிவில் உள்ள காட்டின் நடுப் பகுதியில் உள்ள கற்குகை ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த துப்பாக்கிகள், பெருந்தொகையான வெடிபொருள்கள், தோட்டாக்கள், ஜே. வி. பி. இயக்க புத்தகங்கள் ஆகியவற்றை பொலிஸார் கைப்பற்றினர்.

கடந்த வியாழக்கிழமை அக்குரஸ்ஸ பொலீஸ் சப் இன்ஸ்பெக்டர் குணசிங்க தலைமையிலான குழு அவற்றைக் கைப்பற்றியது.

## நிதித்துறை. .

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ பெலோமினா திரும் ஜிவம்ரொபட் — மே/பா. வல்லிபுரம் (G. T. M. S.), இலுப்பைக்கடவை, மன்னார்.

★ தேவராணி சத்தியேந்திரன் — மே/பா கணேஸ்ராஜ், நாவலர் றோட், நெடுங்கேணி, வவுனியா.

★ சின்னக்குட்டி அருமைராசா — குலோவர் கொமினிக் கேசன், 28, கண்டி வீதி, வவுனியா.

★ இளையதம்பி நடனமூர்த்தி - மே/பா ச. கனகரெட்ணம், ஆடியபாதம் றோட், திருநெல்வேலி.

★ ராஜேஸ்வரி ரகுநாதன் — மே/பா சு. கனகலிங்கம், ரேவதி பேக்கரி, புதுமுறிப்பு, கிளிநொச்சி. (இ)

## படையினர்...

( 1 ஆம் பக்கத் தொடர்ச்சி )

வலிகாமம் பிரதேசத்துக்குள்ளும் ஷெல், மற்றும் பீரங்கிச் சத்தங்கள் கேட்டுக்கொண்டிருந்தன.

கோப்பாய், நீர்வேலி, சிறுப்பிட்டி, அச்சுவேலி ஆகிய இடங்களை அண்டிய பகுதிகளிலேயே இந்த சத்தங்கள் கேட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-15-13-111-173)

## வெள்ளவெளித்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

| | | |
|---|---|---|
| ★ சோல் கொமாண்டோ துப்பாக்கிகள் | — | 10 |
| ★ ஏ.கே. ரக துப்பாக்கிகள் | — | 8 |
| ★ ஜி 3 எல்.எம்.ஜி. | — | 1 |
| ★ ரி -81 எல்.எம்.ஜி. | — | 1 |
| ★ 40 மி.மீ. பிஸ்டல் | — | 1 |
| ★ 60 மி.மீ. கொமாண்டோ மோட்டார்கள் | — | 2 |
| ★ காஸ்கண் | — | 1 |
| ★ டுடைகள் தொடர்பு சாதனம் | — | 1 |
| ★ டுடைகர் வோக்கி | — | 1 |
| ★ தொடர்பு சாதன பற்றரிகள் | — | 2 |
| ★ தொலைநோக்கி | — | 1 |
| ★ கோல் கொமாண்டோ மகஸின்கள் | — | 36 |
| ★ ஏ.கே. மகஸின்கள் | — | 28 |
| ★ ரி- 81 ரம் மகஸின் | — | 4 |
| ★ ஜி-3 தொடர் ரவைகள் | — | 70 |
| ★ 60 மி.மீ. ஷெல்கள் | — | 13 |
| ★ 40 மி.மீ. ஷெல் | — | 1 |
| ★ குண்டு வகைகள் | — | 7 |
| ★ [illegible] ரவைகள் | — | 1880 |
| ★ [illegible] ரவைகள் | — | 861 |
| ★ ரவைத்தடுப்பு கவச அணி | — | 1 |

# பெப்ரவரி மாதத்துக்கான ஓய்வூதிய கொடுப்பனவுகள்

## இன்று முதல் பெற்றுக்கொள்ளலாம்

பெப்ரவரி மாதத்துக்கான ஓய்வூதிய வவுச்சர்களும் காசோலைகளும் கடந்த மாதம் போன்று இம்முறையும் தபால் மூலமே அனுப்பப்பட்டுள்ளன என ஓய்வூதியக் கிளை கணக்காளர் அறிவித்துள்ளார்.

சகல ஓய்வூதியர்களும் தமது ஓய்வூதிய வவுச்சர்களை வங்கிகளில் சமர்ப்பித்து கொடுப்பனவுகளை இன்று முதல் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியக் கொடுப்பனவு தொடர்பான மற்றும் விவரங்கள் வருமாறு:-

★ கிராமிய வங்கிகளில் ஓய்வூதியம் பெறுபவர்களுடைய ஓய்வூய வவுச்சர்களும் காசோலைகளும் அந்தந்தக் கிராமிய வங்கிகளுக்கு நேரடியாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

★ ஊர்காவற்றுறை மக்கள் வங்கி, ஊர்காவற்றுறை இலங்கை வங்கி ஆகியவற்றில் ஓய்வூதியம் பெறுபவர்களினது ஓய்வூதிய வவுச்சர்களும் காசோலைகளும் அந்தந்த வங்கிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

★ கிராமிய வங்கிகள் தவிர்ந்த ஏனைய வங்கிகளில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான ஓய்வூதிய வவுச்சர்கள் தபால் மூலம் அஞ்சல் அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

## எழுதுநர் பதவி: கல்வித் தகமை மூலப்பிரதி கிடைத்ததும் நியமனம்

சாவகச்சேரி, மார்ச் 13

யாழ்.செயலகத்தில் நடந்த எழுதுநர் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியவர்களின் கல்வித்தகமை தொடர்பான மூலப்பிரதிகள் அனுப்பப்பட்டதும் அவர்களுக்கு நியமனம் வழங்கப்படும்.

யாழ். அரச அதிபர் திரு செ. பத்மநாதன் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

யாழ். செயலகத்தில் 1996-02-26, 27 திகதிகளில் நடந்த நேர்முகப் பரீட்சையில் தோற்றிய 51 பேரின் விவரங்கள் நியமனத்துக்காக பொது நிர்வாக அமைச்சுக்கு சமர்ப்பிகப்பட்டன.

அதில் ஒருவரின் விவரங்களில் போதிய தகவல்கள் இல்லை என்று தெரிவிக்கப்பட்டு சகலரின் கல்வித் தகமை மூலப்பிரதிகளும் அனுப்பப்படவேண்டும் என்றும் —அவை கிடைத்ததும் நியமனம் வழங்கப்படும் எனவும்— அந்த அமைச்சுதெரிவித்ததாக அரச அதிபர் தெரிவித்தார்.

உடனடியாக சம்பந்தப்பட்டவர்கள் தமது கல்விச் சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை இம்மாதம் 15ஆம் திகதிக்கு முன்னதாக செயலகத்தில் சமர்ப்பிக்குமாறும் அரச அதிபர் கேட்டுள்ளார்.

(இ-3)

## புத்தூரில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சபாபதி நடராசா(வயது 22), மாணிக்கம் தெய்வானை (வயது 54), சோமு செல்லம்மா (வயது 50) ஆகிய மூவரும் காணாமல் போயிருந்தனர்.

இவர்கள் பற்றி பல தடவைகள் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவுடன் தொடர்பு கொண்டும் பலன் எதுவும் கிடைக்கவில்லை.

எனவே மூவரும் இறந்திருக்கலாம் எனக் கருதப்பட்டது.

இரண்டு மாதங்களுக்கு பின் நேற்று முன்தினம, துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் இம்மூவரும் வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்சப்பட்டிருப்பதாக தகவல் ஒன்று கிடைத்துள்ளது.

வவுனியாவில் இருந்து இங்கே வந்த ஒருவரிடம், தாம் வவுனியா ஆஸ்பத்திரியில் இருப்பது பற்றிய விவரத்தை இவர்கள் எழுதிக் கொடுத்து விட்டுள்ளனர்.

கடிதம் உறவினர்களின் கைக்கு எட்டியதை அடுத்தே இம்மூவரும் உயிருடன் இருக்கும் விவரம் தெரியவந்தது.

(இ-15)

## கிழக்கிலிருந்து...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பப்படுகின்றன,

வடக்கில் நடத்தப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கும் பாரிய இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளுவதற்கு வசதியாகவே இப்படைப் பிரிவுகள் நகர்த்தப்படுகின்றன.

தொப்பிகலை காடுகளில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான ''சூரிய ஒளிக்கற்றை'' இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த விசேட அதிரடிப்படையினரும்வடபகுதிக்கு அனுப்பப்பட விருக்கின்றனர்.

— இவ்வாறு ''திவயின'' மேலும் தெரிவித்துள்ளது.

(உ-10)

## கொமர்ஷல் வங்கியில் ஓய்வூதியம்

சாவகச்சேரி மார்ச் 13

கொமர்ஷல் வங்கி, பருத்தித்துறை கிளையில் இன்று காலை 10.00 மணியிலிருந்து 12.00 மணிவரை ஓய்வூதியக் கொடுப்பனவுகள் பணமாக வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## மாவீரரின் பெற்றோர் கவனத்துக்கு

சாவகச்சேரி, மார்ச் 13

யாழ். மாவட்டத்தில் கடந்த 12 ஆம் திகதி சிறிலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலின் போது 2 ஆம் லெப். கீர்த்திகா (புஸ்பராணி சூசை— கண்டி) என்ற போராளி வீரமரணமடைந்தார்.

இவரது பெற்றோர் அல்லது உரித்துடையோர் கொடிகாமம் கச்சாய் வீதியிலுள்ள மகளிர் மாவீரர் பணிமனையிலோ அல்லது மீசாலையிலுள்ள யாழ். மாவட்ட மாவீரர் பணிமனையிலோ தொடர்பு கொள்ளும்படி மாவீரர் பணிமனையினால் கோரப்பட்டுள்ளது. (இ-ரி)

2 ஆம் பக்கத்தில் மரண அறிவித்தல்கள்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 13-03-96 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org